




Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 132

செவ்வாய்க்கிழமை
07 ஏப்ரல் 2026

பங்குனி 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50




# புதன் விடுமுறை இனிமேல் இல்லை

## நாளைமுதல் அமுல்

**கொழும்பு, ஏப்ரல் 7**

**எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கடந்த மாதம் அறிமுகம் செய்யப்பட்ட புதன்கிழமை விசேட விடுமுறையை ரத்துச் செய்வதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

»11



யாழ். கெருடாவில் பகுதியில்

## மின்னல் தாக்கம்; வீடொன்று சேதம்

யாழ்ப்பாணம், ஏப். 7
வடமராட்சி - கெருடாவில் பகுதியில் மின்னல் தாக்கத்தால் வீடொன்றில் கணிசமான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்றுக்காலை இடிமின்னலுடன் மழை

»10

இந்தியாவின்

## குடியரசுத் துணைத்தலைவர் விரைவில் இலங்கை வருகை



கொழும்பு, ஏப். 7
இந்தியாவின் குடியரசுத் துணைத்தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு விரைவில் இலங்கைக்கு வரவுள்ளார். தனது பயணத்தின்போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க,

»11

## தடுத்து வைப்புக்கு எதிராக சுரேஷ் சாலே ரிட் மனு



கொழும்பு, ஏப். 7
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், தான் தடுத்து வைக்கப்பட்டுள்ளதைச் சவாலுக்கு உட்படுத்தி சுரேஷ் சாலே ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அரச புலனாய்வுத் திணைத்தளத்தின் முன்னாள் பிரதானியான சுரேஷ் சாலே, உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தார். பயங்கர

»11

மின்னல் தாக்கம் தொடர்பில்

## வடமாகாணத்துக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 7
வடமாகாணம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு மின்னல் தாக்கம் தொடர்பில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

»11

மந்திரிமனை புனரமைப்பு

## இரண்டு வாரங்களுக்குள் இறுதி முடிவுக்கு வருக!

சி.வீ.கே.சிவஞானம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7
நல்லூர் - மந்திரிமனை விரைவில் சீரமைப்புச் செய்யப்பட வேண்டும். நல்லூர் மந்திரிமனையின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களும் தொல்லியல் திணைக்களமும் இணைந்து இரு வாரங்களுக்குள் ஒரு முடிவுக்கு வர வேண்டும்

»11



யாழில் பல பகுதிகளில்

## பணம், நகைகள் திருட்டு 4 சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஏப். 7
யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில், பணம், நகைகள் மற்றும் பெறுமதியான பொருள்களைத் திருடிய நான்கு சந்தேக நபர்கள்கைது செய்யப்பட்

»11



ரூபாவின் பெறுமதி நேற்று உயர்வு

விரிவு
பக்கம்:- 02

## அமெரிக்காவைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 7
ஈரானுக்கு எதிராக அமெரிக்காவால் முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் போராட்

»11



## எரிவாயுக் கப்பல் நாட்டை வந்தடைவு

கொழும்பு, ஏப். 7
7 ஆயிரம் மெற்றிக்தொன் எரிவாயுவை ஏற்றியவாறு கப்பலொன்று நாட்டை வந்தடைந்தது. நாட்டில் நிலவும் எரிவாயுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக இறக்குமதிகளை அரசாங்கம் விரிவாக்கம்

»11

பூச்சந்தி பூராணி

"அரசாங்க உத்தியோகத்தர்மாருக்கு இப்பிடி லீவு ஆசையைக் காட்டி மோசம் செய்து போட்டினமே"

## மாவா விற்பனை; ஆறு பேர் கைது

வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஏப். 7
வவுனியா - குடியிருப்புப் பூந்தோட்டம் வீதியில் மாவா விற்பனை மற்றும் கொள்வனவில் ஈடுபட்ட ஆறு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட

»11

## இளைஞரொருவர் வாளுடன் கைது!

போதை மாத்திரைகளும் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 7
யாழ்ப்பாணம் பாசையூர் பகுதியில் இளைஞர் ஒருவர் வாளுடன் கைது செய்யப்பட்ட நிலையில், அவரிடம் இருந்து போதை மாத்திரைகளும்

»11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4398 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 03 10 55 58 |
| விசேட எழுத்து | D |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1465 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 02 46 54 56 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0424 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 3 0 3 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2504 |
| ஆங்கில எழுத்து | W |
| சுப்பர் இலக்கம் | 08 |
| வெற்றி இலக்கங்கள் | 03 18 53 61 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6156 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 0 6 8 3 6 5 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2186 |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கங்கள் | 28 52 79 80 |
| விசேட எழுத்து | W |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0272 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 34 62 63 |

# மாற்றங்களை ஏற்றுக்கொள்ள அதிகாரிகள் ஊக்கம் அவசியம்

## ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.7**

**சமூகம் திறமையான மாற்றங்களை ஏற்றுக்கொள்வதற்குத் தேவையான ஊக்கத்தை அதிகாரிகள் வழங்க வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

நாட்டின் டிஜிற்றல் பொருளாதாரத்தில் ஒரு புதிய மைல்கல்லாகக் கருதப்படும் 'தேசிய கியூ. ஆர். கொடுப்பனவு விழிப்புணர்வுத் திட்டத்தை' ஆரம்பித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சமூகத்தில் நிலவும் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டுமாயின், நாடாக நாம் டிஜிற்றல் கொடுக்கல் வாங்கல்களுக்குள் நுழைய வேண்டும். முறைசாரா பொருளாதாரத்தை முறைசார்ந்த பொருளாதாரமாக மாற்றுவதே எமது நோக்கம். டிஜிற்றல் மயமாக்கல் மூலம் 15 பில்லியன் டொலர் டிஜிற்றல் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் இலக்கை அரசாங்கம் கொண்டுள்ளது.

கியூ.ஆர். குறியீடு என்பது முன்னர் எரிபொருள் கட்டுப்பாட்டுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டதால், அது ஒரு கட்டுப்பாட்டுக் கருவி என்ற பொதுவான பிம்பம் மக்களிடையே உள்ளது. அந்தத் தடையை உடைக்க விசேட கல்வித் திட்டங்கள் அவசியம். எதிர்வரும் புத்தாண்டுக் கால கொடுக்கல் வாங்கல்களை கியூ. ஆர். குறியீடுகள் ஊடாக மேற்கொள்ள மக்களை வங்கி மற்றும் நிதி நிறுவனங்க ஊக்குவிக்கவேண்டும்-என்றார். (ஏ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0864 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 2 8 8 6 8 5 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3130 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கம் | 47 51 55 79 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 12 25 36 46 |
| வெற்றி வாரம் | 5291 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0960 |
| வெற்றி இலக்கம் | 10 22 46 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| விருச்சிகம் | |
| வெற்றி இலக்கம் | 11 27 32 62 |
| சீட்டிழுப்பு வாரம் | 4842 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 19 |
| வெற்றி இலக்கம் | 09 30 45 71 |
| வெற்றி வாரம் | 2306 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 06.04.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 05 13 31 54 |
| வெற்றி வாரம் | 2956 |

# மரக்கறி விலை யாழில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்.மாவட்டத்தில் மரக்கறி வகைகளின் விலை திடீரென சரிவடைந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம், கொடிகாமம், சாவகச்சேரி போன்ற சந்தைகளுக்கு அதிகளவில் மரக்கறி வகைகள் வந்துசேர்வதால் அவற்றின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சந்தை நிலைவரப்படி, கத்தரிக்காய் கிலோ 80 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 100 ரூபாவாகவும், கோவா கிலோ 80 ரூபாவாகவும் ,தக்காளி கிலோ 100 ரூபாவாகவும் ,பூசணிக்காய் கிலோ 100 ரூபாவாகவும் கரட் கிலோ 250 ரூபாவாகவும் ,லீக்ஸ் கிலோ 300 ரூபாவாகவும் ,பாகற்காய் கிலோ 300 ரூபாவாகவும் ,பீற்றூட் கிலோ 100 ரூபாவாகவும் மரவள்ளி கிலோ 150 ரூபாவாகவும் வெண்டிக்காய் கிலோ 200ரூபாவாகவும், பச்சைமிளகாய் கிலோ 200 ரூபாவாகவும்,கீரை ஒருபிடி 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. (ச-17)

# விசேட சோதனைகளில் ஆயிரத்து 30 பேர் கைது

கொழும்பு, ஏப்.7

போதைப்பொருளைத் தடுக்கும் 'முழு நாடுமே ஒன்றாக' எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் ஆயிரத்து 30 பேர் போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 11 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடமிருந்து 264 கிராம் ஹெரோய்ன், 778 கிராம் ஐஸ், 22 கிலோகிராம் 444 கிராம் கஞ்சா, 51,968 கஞ்சா செடிகள், 7 கிராம் குஷ் ரக போதைப்பொருள், ஒரு கிலோ 670 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 44 போதைமாத்திரைகள், 47 கிராம் மதனமோதகம் மற்றும் 11 கிலோ 119 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஏ-இ)



# குருதிக்கொடை

தெல்லிப்பளை மருத்துவமனை, பாணாவெட்டி மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கம் மற்றும் அரிமாக்கழகம் என்பன இணைந்து நடத்தும் குருதிக் கொடை முகாமொன்று இன்று நடைபெறவுள்ளது.

பாணாவெட்டி மருத்துவமனையில் காலை 9 மணிமுதல் இந்தக் குருதிக் கொடை முகாம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# ரூபாவின் பெறுமதி நேற்று அதிகரிப்பு!

கொழும்பு, ஏப்.7

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்றுச் சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் கூற்றுப்படி, அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 311.76 ரூபாவிலிருந்து 311.73 ரூபாவாகக் குறைந்துள்ளதுடன், விற்பனை விலை 319.29 ரூபாவிலிருந்து 319.25 ரூபாவாகக் குறைந்துள்ளது.

இலங்கை ரூபா ஏனைய சில வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராகவும் வலுவடைந்துள்ளதுடன், வளைகுடா நாடுகளின் நாணயங்களுக்கு எதிராகப் பெறுமதி குறைவடைந்துள்ளது. (ஏ-இ)

# தமிழரசின் பெண் உறுப்பினரிடம் ரி.ஐ.டி.யினர் மீண்டும் விசாரணை

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினரும், கிராஞ்சி வட்டார அமைப்பாளருமான திருமதி தயாநந்தன் ஜெயச்சித்திரா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். கொழும்பிலுள்ள விசாரணைப் பிரிவில் இன்று காலை 7 மணியளவில் முன்னிலையாகுமாறு அவருக்கு வழங்கப்பட்ட அழைப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் அவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையில், தற்போது மூன்றாவது முறையாகவும் அவரை விசாரணைக்கு அழைத்துள்ளமைக்கு கட்சி வட்டாரங்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளன. (ம-66)

# கொத்து, ரைஸ் விலையேற்றம்

கொழும்பு, ஏப்.7

கொத்து, ப்ரைட் ரைஸ் மற்றும் சோறுப் பொதியின் விலைகள் 20 ரூபாவால் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வகையில் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பு காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது. அதேநேரம் ஏனைய சிற்றுண்டிகளின் விலைகள் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் ஹர்சன ருக்ஷன் தெரிவித்துள்ளார்.

தேங்காய் எண்ணெய் விலை குறைவடைந்தமையினால் சிற்றுண்டிகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தனியார் வங்கி ஒன்றில் பெரும் உள்ளக மோசடி!

கொழும்பு, ஏப்.7

**தேசிய அபிவிருந்தி வங்கியில் பெரும் நட்டத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு உள்ளக மோசடி கண்டறியப்பட்டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ ஊடக அறிக்கையை மத்திய வங்கியின் தொடர்பாடல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ளது.**

இந்த மோசடி தொடர்பான விவரங்களைத் தேசிய அபிவிருத்தி வங்கியானது மத்திய வங்கிக்குத் தெரிவித்துள்ளது. எனினும், இந்தச் சம்பவத்தால் வாடிக்கையாளர்களின் எந்தவொரு கணக்குகளோ அல்லது வைப்புக்களோ பாதிக்கப்படவில்லை என வங்கி நிர்வாகம் உறுதியளித்துள்ளது என்று மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. அண்மையில் கண்டறியப்பட்ட உள்ளக மோசடிச் சம்பவத்தினால் சுமார் 13.2 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளமை மதிப்பிடப்பட்டுள்ளது என்று உத்தியோகபூர்வமாக தேசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது. எனினும், வாடிக்கையாளர்களின் வைப்புகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்றும், வங்கியின் செயற்பாடுகள் வழமைபோல் தடையின்றி முன்னெடுக்கப்படும் என்றும் வங்கி நிர்வாகம் மேலும் உறுதியளித்துள்ளது. வாடிக்கையாளர்களின் கணக்கு மீதிகள் பாதுகாப்பாக இருப்பதாகவும், வதந்திகளை நம்பவேண்டாம் என்றும் அந்த வங்கி தெரிவித்துள்ளது. இந்தச் சம்பவத்துடன்தொடர்புடைய அனைத்து ஊழியர்களும் உடனடியாகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களின் கணினி அணுகல் வசதிகளும் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. மோசடியுடன் தொடர்புடைய நபர்கள் சட்ட அமுலாக்கத் துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

### சிறை சென்றும் வக்கிரம்

## வித்தியா கொலைக்குற்றவாளி பெண் மருத்துவரிடம் சீண்டல்!

கண்டி, ஏப்.7

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர் கண்டி பல்லேகலை தும்பறைச் சிறைச்சாலைக்கு சிகிச்சை அளிக்க வந்த பெண் மருத்துவரிடம் தகாத முறையில் நடந்துகொள்ள முயற்சித்துள்ளநிலையில் அவர் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வித்தியா கொலை வழக்கில் கூட்டுப்பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை செய்த குற்றத்துக்காக தீர்ப்பாயம் மூலம் மரணதண்டனை விதிக்கப்பட்ட பிரதான குற்றவாளிகளில் ஒருவர் தும்பறைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

குறித்த கைதிக்கு ஏற்பட்ட திடீர் உடல்நலக்குறைவு காரணமாக, சிறைச்சாலை மருத்துவமனையில் கடமையிலிருந்த பெண் மருத்துவர் அவரைப் பரிசோதிக்கச் சென்றுள்ளார்.

இதன்போது, மரணதண்டனைக் கைதி என்ற அச்சமுமின்றி, அந்தப் பெண் மருத்துவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்து அவரைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளார். மருத்துவர் உடனடியாக அபயக்குரல் எழுப்பியதை அடுத்து, அங்கிருந்த சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் ஏனைய மருத்துவ ஊழியர்களும் விரைந்து வந்து கைதியைக் கட்டுப்படுத்தினர். இதனால் பெண் மருத்துவர் எவ்வித காயங்களுமின்றி பாதுகாப்பாக மீட்கப்பட்டார்.

சிறைச்சாலை விதிக்கோவையின்கீழ் குறித்த கைதிக்கு எதிராகக் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## குஷ் போதையுடன் கட்டுநாயக்கவில் கைது!

கொழும்பு, ஏப்.7

குஷ் போதைப்பொருளை நாட்டுக்குள் கடத்திவந்த ஒருவர் கட்டுநாயக்க விமானநிலைய சுங்கப் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தியாவின் புதுடெல்லியில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். அவரது பயணப்பொதியிலிருந்த சொக்லேட் பெட்டிகளுக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த 11 கிலோ 340 கிராம் எடையுடைய 'குஷ்' போதைப் பொருளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (எ-இ)



# கொழும்பு பேருந்து நிலையம் நவீன வசதிகளுடன் திறப்பு!

கொழும்பு, ஏப்.7

கொழும்புகோட்டையிலுள்ள புதுப்பிக்கப்பட்ட மத்திய பேருந்து நிலையம், நாளை புதன்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இரண்டு முனையங்களைக் கொண்ட இந்த நிலையத்தில் தரைத்தளம் பேருந்துகள்தரிப்பதற்கும்,பயணிகள் ஏறுவதற்கும் வசதியான பரந்த இடவசதியைக் கொண்டுள்ளது. இரண்டாம் தளத்தில் நீண்ட தூரம் பயணிக்கும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கான நவீன ஓய்வறைகள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாம் தளத்தில் பேருந்து நிலையத்தின் நிர்வாகப் பணிகளை முன்னெ[illegible] நவீன அலுவலகத் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த முழுமையான புனரமைப்பு மற்றும் நவீனமயமாக்கல் பணிகளுக்காக அரசாங்கம் சுமார் 424 மில்லியன் ரூபா நிதி [illegible] டுள்ளது. (ச-இ)




## பெடியளுக்கு ஆபத்து...!

வடமராட்சியில படிக்கிற பெடியள் இப்ப பள்ளிக்கூடத்துக்கோ இல்லாட்டி ரியூசனுக்கோ போட்டு வீட்ட வருமட்டும் பெற்றார் அடிவயித்தில நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கவேண்டிய நிலைமை. வழக்கமாப் பொம்பிளைப் பிள்ளையள் போய் வாறதெண்டால்தான் இது வரைக்கும் பெற்றாருக்குப் பயமா இருந்தது. இப்ப பெடியளைப் பற்றியும் அப்பிடிக் கவலைப்படவேண்டிய கட்டாயம் வாற அளவுக்கு என்னதான் பிரச்சினை?

வடமராட்சியில பெடியள் படிக்கிற, பேர் போன பள்ளிக்கூடத்தில படிக்கிற ஒரு பெடியன், வீட்டில இருந்து 6 ஆயிரம் ரூபா காசை பள்ளிக்கூடத்துக்கு ஒளிச்சுக் கொண்டு போயிருக்கிறான். இத்தனைக்கும் வீட்டில தாய் தகப்பனுக்குத் தெரியாமல் ஒரு துரும்பைக்கூடத் தொடாத பெடியன், இப்பிடி ஒளிச்சு மறைச்சு காசு கொண்டுபோன விசயத்தை தகப்பன் கண்டுபிடிச்சிட்டார். உடனேயே அவர் வகுப்பு ரீச்சருக்குப் போன் பண்ணி, விசயத்தைச் சொல்லிப் போட்டு அவரும் பள்ளிக்கூடம் போயிருக்கிறார். அங்க போய் ரீச்சர்மாருக்கு முன்னால 'ஏன் இந்தக் காசை கொண்டந்தனீ?' எண்டு கேக்க, 'ப்ரெண்டின்ர பிறந்த நாளுக்கு' எண்டு திக்கித்திணறிப் பதில் சொலியிருக்கிறான் பெடியன். ஆனால் பிறகு தகப்பன் அவனோட ஆறுதலாக் கதைக்கேக்கதான் உண்மை என்னெண்டு சொல்லியிருக்கிறான். அந்தப்பெடியன் அதுக்கு முதல் நாள் பள்ளிக்கூடம் முடிஞ்சு வரேக்க, மோட்டார் சைக்கிளில வந்த சிலர் அவனை வெருட்டிக் காசு கேட்டிருக்கினம். அவன் இல்லையெண்டு சொல்ல, 'நாளைக்கு இந்த இடத்தில தான் நிப்பம். நீ ஆறாயிரம் ரூபா கொண்டரவேணும். இல்லாட்டி உன்ர சிநேகிதரையும், சகோதரத்தையும் என்ன செய்வமெண்டு எங்களுக்கே தெரியாது' எண்டு மிரட்டிப்போட்டு போயிருக்கிறாங்கள். அந்தப் பயத்திலதான் வீட்டுக்கும் சொல்லாமல் உண்டியலில கிடந்த காசை அந்தப் பெடியன் கொண்டு போயிருக்கிறான். இதுதான் உண்மை எண்டு அறிஞ்சபிறகு, அப்பிடி மோட்டார் சைக்கிளில வந்து காசுபறிக்கிறவையைக் கண்டுபிடிக்க பள்ளிக்கூட நிர்வாகம் கடும் முயற்சி எடுக்குதாம். ஆனால் தங்களைப் பற்றின விசயம் பப்ளிக் ஆனதால அந்தக் காசுபறிக்கூட்டத்தை அங்கால காணேலையாம்.

இந்தச் சம்பவம் நடக்கிறதுக்கு கொஞ்சநாளைக்கு முதல் நெல்லியடியில இன்னொரு சம்பவம் நடந்திருக்கு. நெல்லியடியில ரீயூசனுக்குக் கொஞ்சப் பெடியள் போய்க் கொண்டிருக்கேக்க, முன்னால மோட்டார்சைக்கிளில வந்த கொஞ்சப்பேர் அவங்களை மறிச்சு இருக்கிறாங்கள். இந்தப் பெடியளிட்டையும் அந்தக் கும்பல் காசு கேட்டிருக்கு. படிக்கப்போன பெடியளிட்ட எங்க காசு இருக்கும்? அவங்கள் இல்லையெண்டு சொல்ல, அந்தக் கோபத்தில அந்தப் பெடியளை கலைச்சுக் கலைச்சு கொட்டனாலையும், போத்திலாலையும் அடிச்சுப்போட்டு ஓடிட்டாங்கள். அந்தக் காசுபறிக்கூட்டம் அடிச்சதில, ஒரு பெடியன்ர தலையில இழைப்போடுற அளவுக்கு காயம். இதில கவனிக்கவேண்டிய விசயம் என்னெண்டால், இந்த ரண்டு சம்பவமும் நடந்த இடத்துக்கு கிட்டவாத்தான் பொலிஸ் ஸ்ரேசன்கள் இருக்கு. அதுக்குப் பக்கத்திலையே இப்பிடித் துணிவாப் போய் பெடியளை வெருட்டி, அடிச்சு காசு பறிக்க வெளிக்கிடுகினம் எண்டால் எவ்வளவு துணிச்சல் இருக்கோணும். இல்லாட்டிப் பொலிஸின்ர சப்போர்ட் இருக்கோணும். இப்பிடியான விசயங்களை முளையிலையே கிள்ளி எறியோணும். வளரவிட்டால், அது பெரும் ஆபத்தாப் போடும். உரியதரப்புகள் நடவடிக்கை எடுப்பினமோ?

padsi@uthayan.com — பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரந்தன் சந்தியில் சுகாதாரச்சீர்கேடு

## பயணிகள் வேதனை

**கிளநொச்சி, ஏப்.7**

**கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான உபநகரங்களில் ஒன்றான பரந்தன் சந்தியில், முறையான கழிவகற்றல் இன்மை மற்றும் பொதுமலசல கூடத்தின் அவலநிலை காரணமாக நாளாந்தம் மக்கள் அசௌகரியங் களை எதிர்கொண்டு வருகின்றனர்.**

முல்லைத்தீவு, பூநகரி, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நான்கு திசைகளையும் இணைக் கும் ஒரு பிரதான போக்குவரத்து மையமாக இந்த இடம் விளங்கு கின்றது. பரந்தன் நகரின் பொது இடங்களிலும், பேருந்து நிலையப் பகுதியிலும் கழிவுகள் உரிய முறை யில் அகற்றப்படாமல் நீண்டகால மாகத் தேங்கிக் கிடக்கின்றன. சில இடங்களில் வைக்கப்பட்டுள்ள கழி வுத்தொட்டிகள் நிரம்பி வழிவதுடன் அவற்றிலிருந்து கடும் துர்நாற்றம் வீசுவதால் பயணிகள் அந்தப் பகுதி யில் நிற்கமுடியாத நிலை ஏற்பட்டுள் ளது. அத்துடன் அங்கு ஆயிரக் கணக்கான பயணிகளும், உள்ளூர் வர்த்தகர்களும் பயன்படுத்தும் பொதுமலசலகூடமும் தற்போது முழுமையாகப் பயன்படுத்த முடி யாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. உரிய அதிகாரிகள் பரந்தன் நகரின் தூய்மையைப் பேணுவதற்கும் செய லிழந்து கிடக்கும் பொதுமலசல கூடத்துக்கு உடனடியாகத் தண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது டன் அதனை மக்கள் பயன்பாட்டுக் குக் கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-55-113)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் சீருடைகள் வழங்கிவைப்பு

முல்லைத்தீவு, ஏப்.7

ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு ஜீவநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை யைச் சேர்ந்த 46 மாணவர்களுக்கு 80,500 ரூபா பெறுமதியான புதிய சீருடைகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டன. அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல் வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று புதிய சீருடைகளை வழங்கிவைத்தார். (எ-41-66)





மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய நான்காம் பங் குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் சிறப்புப் பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகிப் பக்திபூர்வமாக இடம்பெற்றது. உற்சவத்தில் நூற்றுக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டு பொங்கல் பொங்கிப், படையல் செய்து, நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். (ச-66-17-9-131)

## சிறுபோகத்துக்கான நீர் விரயம் அடாத்தாகவும் பயிர்ச்செய்கை!

### விவசாயிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஏப்.7

இரணைமடுக்குளத்தின் வலதுகரை பிரதான வாய்க்கால் ஊடாக, சிறுபோகச் செய்கைக்கென திறந்துவிடப்பட்டுள்ள நீர் பெருமளவில் வீண் விரயமாக்கப்படுவதுடன், சுமார் 4 ஆயிரத்து 500 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் அடாத்துப் பயிர்ச்செய்கை மேற்கொள்ள நிலப்பண்படுத்தல்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

தற்போது நிலவும் அதிகரித்த வெப்பம் காரணமாக, இரணை மடுக்குளத்தின் நீர்மட்டம் வேகமாகக் குறைவடைந்து வரு கின்றது. இந்தநிலையில் இரணைமடுக்குளத்தின் கீழ், சிறுபோகச் செய்கைக்குத் தீர்மானிக்கப்பட்ட அளவு நீர்ப்பா சனக் காணிகளை விடவும், அதிகளவான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்வதற்கான பண்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பழைய வட்டக்கச்சி, பெரியகுளம், கண்டாவளை உள்ளிட்ட பகுதி களில் உள்ள சுமார் 4 ஆயிரத்து 500 ஏக்கர் வரையான மானாவாரி நிலங்க ளுக் கும் கழிவு வாய்க் கால்கள் ஊடாகக் கொண்டுசெல்லப்படு கின்றது. இவ்வாறான சட்டவிரோத பயிர் செய்கை காரணமாக, சட்டரீதியான பயிர்செய் கைகள் பாதிக்கப்படும் என்று விவசாயிகள் கவலை வெளியிட்டுள் ளனர். (க-55)





## கோடை பெருவிளையாட்டு வல்வையில் கோலாகலம்

யாழ்ப்பாணம், ஏப்.7

வல்வெட்டித்துறையின் மண்ணுக்கே உரிய வீரத்தையும், கலைநயத்தையும் உலகுக்கு பறைசாற்றும் 2026 கோடைகாலப் பெருவிளையாட்டு விழா நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ளது. விழாவின் தொடக்கமாக, தமிழரின் வீர அடையாளமான சிலம்பாட்டம் நடைபெற்றது. இளைய வர்களின் சுறுசுறுப்பான சிலம்பச் சுழற்சிகள் மைதா னத்தை அதிரவைத்தன. இருளைக் கிழித்துக்கொண்டு தீப்பந்தங்கள் காற்றில் சுழல, சிலம்பக் கலையின் உச்ச கட்ட வித்தையை வீரர்கள் நிகழ்த்திக் காட்டினர். வீரத்தை யும், கலைநயத்தையும் வெளிப்படுத்தும் வகையில் பல் வேறு பிரிவுகளில் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# நவீன பணப்பரிமாற்றத்தில் ஒரு பாய்ச்சல்

இலங்கைப் பொருளாதாரத்தின் நீண்டகாலக் கனவான 'பணத்தாள்கள் குறைந்தப் பொருளாதாரம்' நோக்கிய நகர்வு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையிலான 'தேசிய கியூ.ஆர். (லங்கா கியூ.ஆர். ) ஊக்குவிப்புத் திட்டத்தின்' மூலம் நேற்று முதல் புதிய வேகத்தைப் பெற்றுள்ளது. கையில் பணத்தாள்களையும், நாணயக்குற்றிகளையும் சுமந்து திரிவதும், சில்லறைப் பற்றாக்குறைக்காகக் கடைகளில் மல்லுக்கட்டும் நிலையும் மெல்லமெல்ல இல்லாமல் போகப்போகின்றன. 5 ஆயிரம் ரூபா வரையிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு வர்த்தகர்களிடமிருந்து அறவிடப்படும் சேவைக்கட்டணம் முழு மையாக நீக்கப்பட்டிருப்பது, இந்தத் திட்டத்தின் ஆகச்சிறந்த நகர்வாகும். இதன் மூலம் ஒரு சாதாரண பெட்டிக்கடைக்காரர் முதல் தள்ளுவண்டி வியாபாரி வரை எவ்வித மேலதிகச் செலவுமின்றி டிஜிற்றல் யுகத்துக்குள் நுழைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் சுமார் 1.48 டிரில்லியன் ரூபா பெறுமதியான நாணயத்தாள்கள் புழக்கத்தில் இருக்கும் சூழலில், கியூ.ஆர். மூலமான கொடுக்கல் வாங்கல்கள் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பது ஒரு நாணயச்சுழற்சியில் இடைவெளியைக் காட்டுகின்றது. டிஜிற்றல் பொருளாதாரத்தின் பங்காளிகளாவதன் மூலம் பணத்தாள்களை அச்சிடுவதற்கும், அவற்றைப் பாதுகாப்பாகப் பரிமாற்று வதற்கும் அரசாங்கம் செலவிடும் கோடிக் கணக்கான ரூபா சேமிக்கப்படும். இது நாட்டின் ஒட்டு மொத்தப் பொருளாதாரத்தின் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதுடன், கறுப்புப் பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தவும் பெரிதும் உதவும்.

இருப்பினும், இந்த டிஜிற்றல் பாய்ச்சலில் சில சவால்களையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். குறிப்பாக, கிராமப்புறங்களில் வசிக்கும் முதியோர்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவு குறைந்தவர்களுக்கு இது ஆரம்பத்தில் ஒரு மலைப்பாகத் தோன்றலாம். இணைய வசதி சீராக இல்லாத பகுதிகளில் இந்தக் கொடுப்பனவுகள் தடைப்பட வாய்ப்புள்ளது. மேலும், 'சைபர் பாதுகாப்பு' குறித்த அச்சம் மக்களிடையே நிலவுவதால், அவர்களின் வங்கிக்கணக்குகள் பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையை அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும். ஸ்மார்ட் போன் இல்லாத அடித்தட்டு மக்களையும் இந்தத்திட்டத்துக்குள் எவ்வாறு உள்வாங்குவது என்பது குறித்த மேலதிகச் சிந்தனைகளும் அவசியமாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் ஏற்கனவே பணத்தாள்களைக் கைவிட்டு டிஜிற்றல் பரிமாற்றங்களுக்கு மாறிவிட்ட நிலையில், இலங்கை எடுத்துள்ள இந்த முடிவு காலத்தின் கட்டாயமாகும். ஒவ்வொரு குடிமகனும் டிஜிற்றல் பொருளாதாரத்தின் பங்காளியாக வேண்டும் என்ற இலக்கு வெறும் கோமாகமட்டும்நின்றுவிடாமல், சாதாரண மக்களின் அன்றாட வாழ்வில் ஒரு பழக்கமாக மாறவேண்டும். நுண்தொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தச் சலுகையைப் பயன்படுத்தி, நாமும் டிஜிற்றல் மயமாவோம். சில்லறைகளைத் தேடும் யுகத்திலிருந்து, வெறும் ஒரு 'ஸ்கான்' மூலம் கொடுக்கல் வாங்கல்களை முடிக்கும் நவீன யுகத்துக்கு மாறுவது தேசத்தின் வளர்ச்சிக்கு இடும் வலுவான அத்திபாரமாகும்.




## பொய்யாமொழி

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்

**பொருள்:** முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்து இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.




# மருத்துவர்கள் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தம்



கொழும்பு, ஏப்.7

**அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்த பணிப்புறக் கணிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.**

தமது கோரிக்கை தொடர்பில் அரசாங்கம் உரிய தீர்வுகளை அறிவிக்கத் தவறும் பட்சத்தில், அடுத்த கட்ட போராட்டம் தொடர்பில் நேற்றுக் காலை 8 மணிக்குப் பின்னர் தீர்மானிக்கப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது. சுகாதார அமைச்சரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது தொழிற்சங்க நடவடிக்கை குறித்த அடுத்த கட்ட தீர்மானத்தை எடுக்கத் தயார் என்றும் மருத்துவச் சங்கம் சுட்டிக் காட்டி யிருந்தது.

சுகாதார அமைச்சர் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக்கொண்டதையடுத்து, பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# புதையல் தோண்டிய 11 பேர் கைது

மட்டக்களப்பு, ஏப்.7

மட்டக்களப்பு வெல்லாவெளிப் பிரதேசத்தில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட இரு பெண்கள் உட்பட 11 பேர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய இந்தக் கைது இடம்பெற்றது.

அத்துடன் சந்தேகநபர்கள் புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்திய நவீன ஸ்கானர் இயந்திரம் மற்றும் ஹைஏஸ் ஒன்றையும் பொலிஸார் மீட்டனர். (ச-இ)



# டீசல் பதுக்கிய இருவர் கைது

கொழும்பு, ஏப்.7

டீசல் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் இருவர் கொழும்பு மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 826 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், எரிபொருள் விற்பனை மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 72,210 ரூபா பணமும் மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் 23 மற்றும் 61 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# வீட்டிலிருந்து சடலம் மீட்பு

காலி, ஏப்.7

காலி வெலிவத்தையில் வீடொன்றில் இருந்து சடலம் ஒன்று நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் வெலிவத்தை பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் என்றும், இவர் கடந்த 4ஆம் திகதி இரவு மதுபோதையில், தலையில் காயத்துடன் வீட்டுக்கு வந்து உறங்கினார் என்றும், மறுநாள் காலை அவர் உயிரிழந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

# விபத்தில் சிக்கி இளைஞர் பலி

பொலநறுவை, ஏப்.7

பொலநறுவை - மஹியங்கனை வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 23 வயதுடைய இளைஞரொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றபோது வந்த தொலைபேசி அழைப்புக்குப் பதிலளிப்பதற்காக, தனது கையடக்கத் தொலைபேசியை எடுக்க முற்பட்டபோது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மரமொன்றில் மோதியுள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்துள்ளார். (ச-இ)

நாளை
புதன்கிழமை - பங்குனி 25
08.04.2026
சுபநேரம் : 04.37 – 06.07
ராகுகாலம் : 12.07 – 01.37



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவு தீவக ஆசிரியர்களுக்கு நிறுத்தம்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வியமைச்சுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப்.7
யாழ். மாவட்டத்தின் நெடுந்தீவு உள்ளிட்ட தீவகப் பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவுகள் வழங்கப்படாதுள்ளன. இது ஆசிரியர்களின் உரிமைகளைத் தட்டிப் பறிக்கும் செயலாகும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மத்திய கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது-

வடமாகாணக் கல்வி அதிகாரிகளின் பொறுப்பற்ற தகவல்களே இந்த நிலைக்குக் காரணம். கடல்வழிப் பயணத்தை மேற்கொண்டு பணியாற்றும் சுமார் 174 ஆசிரியர்கள் தற்போது இந்தக் கொடுப்பனவை இழந்துள்ளனர். புதிய பாடசாலை வகைப்பாட்டுச் சுற்றறிக்கை (01/2024 (I)) மூலம் இந்தப் பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

இணைய வசதி, நீர் வசதி, பேருந்துப் போக்குவரத்து போன்ற காரணிகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவுகள் வகைப்பாடு தவறாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் தினசரி உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்ளும் கடல் வழிப் பயணம் குறித்த காரணி முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. வடமாகாணக் கல்வி அதிகாரிகள் அமைச்சுக்குத் தரவுகளை வழங்கும்போது இந்த முக்கியமான விடயத்தைக் கவனிக்கத் தவறியுள்ளனர்.

2026ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் (Budget) ஆசிரியர்களுக்கான இடர்பாட்டுக் கொடுப்பனவு உயர்த்தப்பட்டிருந்தபோதிலும், இன்னும் பழையபடிகளான 2,500 ரூபா மற்றும் 1,500 ரூபா ஆகியவையே வழங்கப்பட்டுவருகின்றது.

தீவகப் பாடசாலைகளின் வகைப்பாட்டை உடனடியாக மறுபரிசீலனை செய்து, அவற்றை மீண்டும் கஷ்டப் பிரதேசப் பட்டியலில் சேர்க்கவேண்டும். பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டவாறு உயர்த்தப்பட்ட இடர்பாட்டுக் கொடுப்பனவுகளை உடனடியாக வழங்க வேண்டும். தவறான தகவல்களை வழங்கிய வடமாகாணக் கல்வி அதிகாரிகள் இந்தச் சிக்கலைச் சரிசெய்ய விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆசிரியர்களின் உரிமைகளைத் தட்டிப்பறிப்பது கல்வித்துறையின் வீழ்ச்சிக்கே வழிவகுக்கும் - என்றுள்ளார். (ச-66,422)

### ஐஸ் போதைப்பொருளுடன்

# கைதான முதியவருக்கு 3 ஆண்டுகள் சிறை!

முல்லைத்தீவு, ஏப்.7
முல்லைத்தீவில் 973 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த மற்றும் விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முதியவர் ஒருவருக்குக் கிளிநொச்சி மேல் நீதிமன்றம் மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட இந்த வழக்கு, பின்னர் கிளிநொச்சி மேல் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு மாற்றப்பட்டது.

இதன்போது குறித்த குற்றவாளி முற்குற்றம் எதனையும் கொண்டிருக்காமை மற்றும் அவரது வயது முதுமை என்பவற்றைக் கவனத்தில் எடுத்த மன்று முதலாவது குற்றச்சாட்டுக்கு மூன்று ஆண்டு கால கடூழியச் சிறைத்தண்டனையும், மூன்று இலட்சம் ரூபா தண்டப் பணமும் விதித்ததுடன் இரண்டாவது குற்றச்சாட்டுக்கும் மூன்று ஆண்டுகால கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்ததுடன் இரு கடூழியச் சிறைத்தண்டனைகளையும் ஏக காலத்தில் அனுபவிக்குமாறும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச-55)

# நாட்டிய சங்கமம்

யாழ்ப்பாணம், ஏப்.7
சாவகச்சேரி பூர்ணா நர்த்தனாலயம் நிருத்த நிருத்திய நாட்டிய சங்கமம் நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜித்தா சுனில் ஆரியரத்ன தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, கலைக்குரிசில் நடனக் கலைஞர் ஸ்ரீமதி நல்லினி சிவராம் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஷ் ஆகியோரும் கலந்துகொள்வர். (ச-9)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப்.7
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர்களும் மருத்துவர்களும் இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப்பிரிவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி. த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

மனிதாபிமானக் குருதிக்கொடை முகாம் நிகழ்வில் மருத்துவர்களுடன் பொதுமக்களும் இணைந்து கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கி உயிர்களைக் காப்பாற்ற உதவுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

★★★★

யாழ்ப்பாணம், ஏப்.7
'சேவ் ஏ லைப்' அரச சார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் 12ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான முகாம் இன்று செவ்வாய்க்கிழமை இல.460, நாவலர் வீதி நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. குருதிக்கொடையாளர்கள் பங்கேற்று உதிரக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-இ)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.7
அனலைதீவு பெரியபுலம் ஸ்ரீ சங்கரநாதர் மகா கணபதிப் பிள்ளையார் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுத் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக பத்துத் தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 13ஆம் திகதி இரவு சப்பறத்திருவிழாவும், மறுநாள் சித்திரைப் புதுவருடத் தினத்தன்று சித்திரத் தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ச-9)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகள்வழியில் வீண்செலவுகள் ஏற்படக் கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. மாலையில் வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** காலையில் சற்றுச்சோர்வாக இருக்கும். பிற்பகலுக்குமேல் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். தாயின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அலுவலகத்தில் உற்சாகமான நிலையே காணப்படும்.

**மிதுனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உகந்த நாள். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்ட சிறுசிறு பிணக்குகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**சிம்மம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**கன்னி:** ஆனால், போதுமான பணம் இருப்பதால் கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாது. மாலையில் வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இன்று நீங்கள் எடுக்கும் புதிய முயற்சி வெற்றிகரமாகமுடியும்.

**விருச்சிகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.


**மகரம்:** இன்று எதிலும் சற்றுப் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நூல்களை வெளியிடுவோரே ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள்



## வவுனியாவில் ரில்வின் தெரிவிப்பு

**வவுனியா, ஏப்.7**

**உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான உண்மையான சூத்திரதாரிகள் யார்? என்பது விரைவில் வெளிவரும். தற்போது அந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களே அது பற்றி நூல் வெளியிட்டுவருகின்றனர் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நடைபெற்ற ஏப்ரல் வீரர்கள் தின நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தாக்குதல்பற்றிமுறையானவிசாரணைகள் நடக்கும் நிலையில், ஒரு சிலர் 'சூத்திரதாரி யார்?' என நூல் வெளியிடுகிறார்கள். அந்த நூல் வெளியீட்டு நிகழ்வுக்கே பல பிரதான சூத்திரதாரிகள் சென்றிருந்தார்கள். உண்மை விரைவில் வெளிவரும் என்பதால் மக்கள் இதுகுறித்துக் கலக்கமடையத் தேவையில்லை.

மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களை எம்மால் கட்டுப்படுத்த முடியாது, ஆனால் அதன் விளைவுகளை முகாமைத்துவம் செய்ய எரிபொருள் விநியோகத்தில் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியவர்களே இன்று ஊழல் பற்றிப் பேசுகிறார்கள். ஒரு குடும்பத்தின் ஊழலால் நாடு வீழ்ந்தது என நீதிமன்றமே கூறிய பின்னரும் அவர்கள் பேசுவது ஆச்சரியமாகவுள்ளது. விமர்சனங்களால் தற்போதைய மக்கள் சக்தி அரசாங்கத்தை எவராலும் வீழ்த்த முடியாது - என்றார். (ச-இ)

# ஈஸ்டர்தினத் தாக்குதல்தாரிகள் சுதந்திரமாக நடமாடுவது ஆபத்து

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.7

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னால் இருந்து செயற்பட்டவர்கள் சுதந்திரமாகச் செயற்படுவது நாட்டின் தேசியப் பாதுகாப்புக்கும் இன ஐக்கியத்துக்கும் அச்சுறுத்தல் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கம்மன்பிலவின் புத்தகம் சுரேஷ் சலேயின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்களின் சாராம்சமாகும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை சஹ்ரான் தலைமையிலான குழுவே மேற்கொண்டது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் இதற்காக பின்னணியில் இருந்து அவர்களுக்கு உதவி செய்த ஒரு குழு இருக்கிறது என்பதை இந்தத் தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் வழங்கிய அதிகமானவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் யார் எனக் கண்டுபிடிக்கவேண்டும் என்றே நாம் கோருகின்றோம். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இன்னும் பல தொகுதிகள் வெளிப்படுத்தாமல் இருக்கின்றன. அவை நாடாளுமன்ற நூலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் பார்க்கக்கூடியவகையிலே இருக்கின்றன. அந்த விசாரணை அறிக்கையின் அனைத்துத் தொகுதிகளையும் மக்கள் பார்ப்பதற்கு முடியுமானவகையில் வெளிப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் என மீண்டும் வலியுறுத்துகிறோம்-என்றார். (எ-இ)

# மேற்கத்தேய நாடுகளுக்கு அடிபணிகிறது அரசாங்கம்

## மக்கள் போராட்ட இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.7

தற்போதைய அரசாங்கம் மேற்கத்தேய நாடுகளுக்கு அடிபணிந்து செயற்படுகின்றது என்று மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர் வசந்த முதலிகே குற்றஞ்சாட்டியுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் மேற்கொண்டுள்ள இரகசிய இராணுவ ஒப்பந்தங்களை நாட்டு மக்களுக்கு மறைத்து, அந்த நாடுகளுக்கு அடிபணிந்து செயற்படுகின்றது.

இலங்கை அரசாங்கம் தன்னை ஒரு சார்பற்ற நாடாகக் காட்டிக்கொண்டாலும், அமெரிக்காவுடன் பல்வேறு இரகசிய உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் 5ஆம் திகதி, இந்தியாவுடன் ஏழு பாதுகாப்பு உடன்படிக்கைகளை இந்த அரசாங்கம் இரகசியமாகச் செய்துகொண்டது. அந்தப் பாதுகாப்பு, சுகாதார மற்றும் எரிசக்தி உடன்படிக்கைகளின் உள்ளடக்கங்களை அரசாங்கம் இதுவரை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தவில்லை. ஜப்பானுடன் மேற்கொள்ளப்பட்ட இராணுவ ஒப்பந்தம் மற்றும் அமெரிக்கப் படைகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள இராணுவ இணக்கப்பாடுகள் தொடர்பிலும் அரசாங்கம் மௌனம் காக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உடனடியாக இந்த அனைத்து இரகசிய உடன்படிக்கைகளையும் பகிரங்கப்படுத்தவேண்டும். அத்துடன் இந்த ஆபத்தான ஒப்பந்தங்களைக் கிழித்தெறியவேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம். உலகில் எங்கு நடக்கும் யுத்தமும் நமது வாழ்க்கை, எதிர்காலம் மற்றும் நாட்டின் இறையாண்மையோடு நேரடியாகத் தொடர்புடையது. எனவே, இந்த ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகவும், அரசாங்கத்தின் அடிபணிவு அரசியலுக்கு எதிராகவும் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடவேண்டும்-என்றார். (எ-இ)

# ஐ.தே.க.வுடன் மட்டுமே ஐ.ம.சக்தி கூட்டணி

## எஸ்.எம். மரிக்கார் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.7

ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமே இணைந்து செயற்படும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வலதுசாரி அரசியல் கலாசாரத்தைக் கொண்ட ஐக்கிய மக்கள் சக்தி மீது எந்தவித ஊழல் குற்றச்சாட்டுகளும் இல்லை. நாட்டை வங்குரோலடையச் செய்தவர்களுடன் ஒருபோதும் கூட்டணி அமைக்கப் போவதில்லை.

மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச மற்றும் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரே இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவ்வாறான நிலையில், அவர்களுடன் எம்மால் எவ்வாறு கூட்டணி அமைக்க முடியும்? நாட்டைப் பொருளாதார ரீதியாகப் பாதிப்புக்குள்ளாக்கிய தரப்பினரைத் தவிர்த்து, தமது அரசியல் கொள்கையுடன் ஒத்துப்போகும் தரப்புடன் மாத்திரமே இணைந்து பயணிக்கத் தீர்மானித்துள்ளோம்-என்றார். (எ-இ)



# கிராமத்தின் அறிவுசார் மாற்றத்துக்கு சனசமூக நிலையங்களே அச்சாணி!

## தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7

சனசமூக நிலையங்கள் வெறும் கட்டடங்கள் அல்ல, அவை கிராமத்தின் ஆன்மா. வலிகாமம் கிழக்கில் அறிவார்ந்த மற்றும் கலாசார மாற்றங்களை ஏற்படுத்துவதில் சனசமூக நிலையங்கள் முதன்மையான பங்களிப்பை வழங்கவேண்டும்.

இவ்வாறு உரும்பிராய் மேற்கு வைத்தீஸ்வரா சனசமூக நிலையத்தின் திறமையாளர் கௌரவிப்பு நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையில் பிரதேசசபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வலிகாமம் கிழக்கில் நூற்றாண்டுகளைக் கடந்த சனசமூக நிலையங்கள் இன்றும் இயங்கிவருகின்றன. இவை மக்களின் தன்னெழுச்சியால் உருவான உண்மையான மக்கள் அமைப்புகள். மத்திய அரசாங்கத்தின் அமைச்சுகளால் அரசியல் நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்ட பல அமைப்புகளுக்கு மத்தியில், சனசமூக நிலையங்கள் உள்ளூராட்சி அரசால் நிர்வகிக்கப்படும் நிலைத்தகு அபிவிருத்தி அமைப்புகளாகத் திகழ்கின்றன. வைத்தீஸ்வரா சனசமூகநிலையம், விளையாட்டுக்கழகம், மகளிர் அமைப்பு மற்றும் ஆலய நிர்வாகம் எனப் பலதரப்பட்ட தரப்பினரையும் ஒன்றிணைத்துப் பயணிப்பதற்கு - உண்மையான அபிவிருத்திக்கு இத்தகைய கூட்டுப்பங்கேற்பு அவசியம் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கிழக்குப் போர்ச்சூழல்

# தென்னைசார் பொருள்கள் ஏற்றுமதி பெரும் பாதிப்பு!



**கொழும்பு, ஏப்.7**

**மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவிவரும் பதற்றமான போர்ச்சூழல் காரணமாக, இலங்கையின் தென்னை சார்ந்த உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி பின்னடைவைச் சந்தித்துள்ளதாக இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி நயனி ஆராச்சிகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,தென்னை உற்பத்தி ஏற்றுமதி மூலம் ஆண்டுதோறும் ஈட்டப்படும் 1,200 மில்லியன் முதல் 1,800 மில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான வருமானம் இம்முறை வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது.துருவிய தேங்காய், தேங்காய்ப் பால் மற்றும் தேங்காய்ப் பால்மா போன்ற பொருள்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளே பிரதான சந்தையாக விளங்குகின்றன. தற்போது போ ச்சூழலால் இந்த ஏற்றுமதி நடவடிக்கைகள் முழுமையாகத் தடைப் பட்டுள்ளன. இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தென்னை உற்பத்திகள் 100 சதவீதம் மத்திய கிழக்குச் சந்தையையே சார்ந்துள்ளதால், தற்போது அந்தச் சந்தை செயலிழந்துள்ளமை பெரும் சவாலாக மாறியுள்ளது.ஏற்றுமதி செய்யமுடியாமல் தேங்கியுள்ள பெருமளவிலான தேங்காய்களை வீணாக்காமல் உள்நாட்டுத் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்கு அதிகளவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.மத்திய கிழக்குச் சந்தையில் ஏற்பட்டுள்ள இந்தத் தடையை நிவர்த்தி செய்ய, இலங்கை அரசு உடனடியாக மாற்றுச் சர்வதேசச் சந்தைகளைக் கண்டறிய வேண்டியது அவசியம் - என்றார்.

(ச-இ)


**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து**

**கடைக் கட்டடம் வாடகைக்கு வழங்குதல்**

இல. 127 கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள கட்டடத்தின் இடது பக்கமாகவுள்ள 1 ம் கடைக் கட்டடம் (நீளம் 35 அடி X அகலம் 15 அடி ) வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. கடைக்கட்டடம் வாடகைக்கு பெற விரும்புவோர் சங்கத்தின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நிபந்தனைகள்

01. வாடகைக்கு வழங்கப்படும் காலம் 02 வருடங்கள்.
02. மாதாந்த வாடகையாக ரூபா 150000.00 அறவிடப்படும்.
03.முற்பணம் ரூபா 18,00,000.00 செலுத்தவேண்டும்.
04.வாகனத் தரிப்பிட வசதி வழங்கப்படும்.
05.விண்ணப்பமுடிவுத் திகதி : 20.04.2026
06.தொடர்பு இல : 021 222 2587

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
தலைவர்



**வீடு or ரூம் வாடகைக்குத் தேவை**

வைத்திய உத்தியோகத்தர் ஒருவருக்கு வீடு or ரூம் வாடகைக்கு தேவை.
யாழ் போதனா வைத்திய சாலையில் இருந்து 2 km தூரத்திற்குள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- 075 261 6028



**வீட்டுப் பராமரிப்பாளர் தேவை**

யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு அருகாக உள்ள வீடொன்றைப் பராமரிப்பதற்கு, பராமரிப்பாளர் தேவை.



* கடமை நேரம் - காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை
* அனுபவத்துக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்.

தொடர்புக்கு - 077 120 9998





**மண்கும்பான் வெள்ளைப்புற்றடி**

**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய**

**7 ஆம் திருவிழா**



**நாக சர்ப்ப வெள்ளோட்டம்**

**(07.04.2026) செவ்வாய்க்கிழமை**

**மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய 7ஆம் திருவிழாவை முன்னிட்டு புதிதாக அமைக்கப்பட்ட நாகசர்ப்ப வெள்ளோட்டம் இன்று (07.04.2026) செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணியளவில் நடைபெறும்.**

**அதனைத்தொடர்ந்து இந்தியாவில் இருந்து வருகை தந்த பாடகர்களின் மாபெரும் ஆன்மீக இசைச் சங்கமமும் நடைபெறும்.**



ஏழாம் திருவிழா உபயகாரர்கள்

**நியூ லலிதா நகை மாளிகை**

**ஆனந்தராசா விமலாதேவி குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகைக்கான அழைப்பு

**உணவு குடிபானம் மற்றும்**
**சிற்றுண்டிகளை வழங்கல்**
**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடமாகாணம்**
**NP/20/FB/PROC/FOOD/2026**

மாகாணக்கல்வித் திணைக்களத்தால் 01.05.2026 - 30.04.2027 வரையான காலப் பகுதிக்கு செயலமர்வுகள் மற்றும் நிகழ்வுகளிற்கு உணவு குடிபானம் மற்றும் சிற்றுண்டிகளை கொள்வனவு செய்வதற்காக திணைக்களப் பெறுகைக்குழு (பெரியது) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றது.

1. பெறுகைகள் அனைத்தும் தேசிய விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படும்.
2. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் : ரூபா 1000.00
3. பெறுகைப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் காலப்பகுதி: அலுவலக நாட்களில் 07.04.2026 தொடக்கம் 21.04.2026 வரையான காலப்பகுதியில் காலை 9.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்
4. விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதியும் இடமும் : 23.04.2026 திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பதாக வடமாகாணக் கல்வித் திணைக்கள பிரதமகணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப் படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**மாகாணக் கல்வித்திணைக்களம்**
**திணைக்கள பெறுகைகள் குழு (பெரிது).**

(CR 47353) A

## 25 ஆவது அகவை தின வாழ்த்துக்கள்

25 ANNIVERSARY

MATHI COLOURS Printers

யாழ் மண்ணில் தனக்கு என்று ஒரு தனியிடம் பிடித்து தற்போது வெள்ளிவிழாவில் அடி எடுத்து வைக்கும் **“மதி கலர்ஸ்“** நிறுவனத்திற்கும், ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்..

தங்கள் நிறுவனம் மென்மேலும் பன்மடங்கு வளர்ச்சியடைய “ நல்லையம்பதி நாயகன் “ துணை நிற்பாராக!

மகிழ்ச்சி பொங்க வாழ்த்துக்கள் பகிரும்..

RTL
Ruby Trading Lanka (Pvt) Ltd

(CS/61163) J-1

## பொது மக்களுக்கான அறிவித்தல்
## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## 2026 ஆம் ஆண்டிற்கான குத்தகை வழங்குவதற்கான மீள் கேள்வி கோரல்

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் இறைச்சிக் கடை மற்றும் மத்திய பேரூந்து நிலைய கடை (மக்கள் வங்கி அருகாமை) என்பனவற்றை 2026ம் ஆண்டு சித்திரை மாதம் முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் காலம் :- 07.04.2026 தொடக்கம் 16.04.2026 வரை
(மு.ப 9.00 மணி - பி.ப 2.00 மணிவரை அலுவலக நாட்களில் மட்டும்)
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி :- 17.04.2026 முற்பகல் 10 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 17.04.2026 முற்பகல் 10.30.

நிபந்தனைகள்:

1. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தவிசாளர் கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு முத்திரை இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 17.04.2026 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 17.04.2026 முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட பிரதேச வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
4. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுப்பது தொடர்பில் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
5. எமது சபையின் சந்தைகள், இறைச்சிக்கடைகளிலிருந்து 1KM தூரத்திற்குட்பட்ட கடைகளில் அல்லது வேறு எவ்விடத்திலும் இறைச்சி விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது.
6. ஒவ்வொரு கேள்விப்பத்திர வகைகளுக்கும் அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.
7. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் அல்லது சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் குறிப்பிட்ட கேள்வித் தொகையின் 1/3 பகுதியை பாதுகாப்பு வைப்பாக செலுத்தி குத்தகை ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
8. கடைகளுக்கான விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு சபையின் கடை நடாத்தியவராயின் எதுவித நிலுவையும் இல்லை என்பதனை உப அலுவலக பொறுப்பதிகாரியால் உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
9. மாத வாடகையாவும் விலை மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் மாற்றத்தை ஏற்படுத்தும்.
10. மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளவும்.
தொலைபேசி இல :- 021 -2290001

| இல | பொதுசந்தை குத்தகை மற்றும் இறைச்சிக்கடை விபரம் | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NB) நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|
| 01. | மத்திய பேரூந்து நிலைய கடை (மக்கள் வங்கி அருகாமை) | 2000.00 | 8,500.00 | 841,274.72 | ..... |
| 02. | தண்ணீரூற்று கோழி இறைச்சிக் கடை | 2000.00 | 19,500.00 | 1,912,581.00 | 2700.00 |

தவிசாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

07.04.2026

# ஹோர்மூஸ் நீரிணையை கடந்துள்ள 15 கப்பல்கள்!

நியூயோர்க், ஏப்.7

ஈரானின் அனுமதியுடன் 15 கப்பல்கள் ஹோர்மூஸ் நீரிணையைக் கடந்து சென்றுள்ளன என்று பார்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

போர் தொடங்குவதற்கு முன்பு இருந்ததைவிட, இவ் வழியான போக்கு

வரத்து இன்றும் 90 வீதம் குறைவாகவே உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை ஈரானிய அதிகாரிகள், இந்த முக்கியமான கப்பல் போக்குவரத்துப் பாதை மூடப்பட வில்லை என்றும் அது எதிரி நாடுகளுக்கு மட்டுமே மூடப்பட்டுள்ளது என்றும் மீண்டும் மீண்டும் கூறிவருகின்றனர். (எ-இ)

## 90 ஆவது அகவையும் 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

தோற்றம்
14
.
03
.
1936



மறைவு
25
.
03
.
2019

**அமரர் செல்லையா இராசலிங்கம்**


**திதி: அபரபக்ஷ பஞ்சமி**

ஏழாம் ஆண்டும் ஆனது எங்கள் ஆருயிர் தந்தையே
இழந்து ஏழு ஆண்டுகள் ஆகியும்
எங்கள் மனதில் இன்றும் என்றும்
வாழும் எங்கள் அப்பாவே உங்களை
பிரிந்த இந்த ஏழு வருடங்கள் எங்களுக்கு
ஏழுயுகமாக தெரிகிறது உங்களின்
அரவணைப்பும், கடின உழைப்பும், அறிவுரைகளும்
இன்றும் எங்களை வழிநடத்துகின்றன
உங்கள் நினைவு என்றும் எங்களை
விட்டு அழியாது அப்பா.....

**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

உங்கள் நினைவுகளோடு வாழும்..
கல்வியங்காடு. (CS/61160) N-1 குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வவுனியாவில்

## காற்றுடன் மழை;4 வீடுகள் சேதம்

வவுனியாவில் கடந்த சனிக் கிழமை மாலை பெய்த காற்றுடனானமழைகாரணமாக, மதுராநகர்ப் பகுதியில் 4 வீடுகள் பகுதி யளவில் சேதமடைந்துள்ளன. ஆச்சிபுரம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மதுரா நகர்ப் பகுதியில் அரை நிரந்தர மற்றும் தற்காலிக வீடுகளின் கூரைப் பகுதி வேலிகள் என்பன காற்றால் தூக்கி வீசப்பட்டுள்ளன. இதனால் 4 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. (க-110)

மின்னல்...

கொட்டித் தீர்த்தது. இதன்போதே, கெருடாவில் பகுதியில் தென்னை ஒன்றின் மீது இடி வீழ்ந்ததுடன், அருகிலிருந்த வீட்டின் மீதும் அது பெருமளவு சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் தெய்வாதீனமாக வீட்டில் இருந்தவர்கள் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. (அ-ம-26)



## குருக்கள்மடம் அகழ்வுப்பணி தற்காலிகமாக நிறுத்தம்

மட்டக்களப்பு - குருக்கள்மடம் கடற்கரைப் பகுதியில் கடந்த மூன்று நாள்களாக முன்னெடுக்கப்பட்டு வந்த அகழ்வுப்பணிகள், எவ்வித மனித எச்சங்களும் கண்டெடுக்கப்படாத நிலையில் கடந்த புதன்கிழமை மாலையுடன் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் இந்த அகழ்வுப்பணிகள் கடந்த மூன்று நாள்களாக இடம்பெற்றன.

சந்தேகிக்கப்பட்ட குறிப்பிட்ட இடத்தில் சுமார் 6 அடி ஆழம் வரை தோண்டப்பட்டது. இருப்பினும், மனித உடல்களின் எச்சங்களோ அல்லது வேறு தடயங்களோ அங்கு கண்டுபிடிக்கப்படவில்லை. தோண்டப்பட்ட குழிகள் நேற்றுமுன்தினம் மாலையோடு மூடப்பட்டு, அந்தப் பகுதி மீண்டும் சீரமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்தப்பணியை முழுமையாகக் கைவிடாமல், அந்தப் பகுதியின் ஏனைய இடங்களை ஸ்கேன் செய்து உறுதிப்படுத்த அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். ஸ்கேன் பரிசோதனையில் ஏதேனும் சந்தேகத்துக்கிடமான அடையாளங்கள் தென்படும் பட்சத்தில், மீண்டும் நீதிமன்ற அனுமதியைப் பெற்று அகழ்வுப் பணிகள் தொடரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு மட்டக்களப்பு கல்முனை வீதியால் பயணம் செய்த 170 முஸ்லிம்கள் கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டனர். அவர்கள் இந்தக் குருக்கள்மடம் கடற்கரையை அண்டிய பகுதியில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற நீண்டகால சந்தேகத்தின் அடிப்படையிலேயே இந்த அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வருடாந்தப் பரிசோதனை நிகழ்வு

கிளிநொச்சி, ஏப்.7

தருமபுரம் பொலிஸ் நிலையத்தின், வருடாந்தப் பொலிஸ் பரிசோதனை நிகழ்வு, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். திசாநாயக்க தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக குணசேகர பொலிஸ் பரிசோதனையை மேற்கொண்டார். இந்தப் பரிசோதனையில் பொலிஸாரின் சீருடைகள் மற்றும் அவர்கள் பயன் படுத்தும் அரச வாகனங்கள் மற்றும் பொலிஸாரின் பயன்பாட்டிலுள்ள அரச சொத்துகள் அனைத்தும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (க-113)




## பருத்தித்துறையில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ். மருத்துவச்சங்கம் மற்றும் யாழ்.மருத்துவப்பிரதிநிதிகள்சங்கம் ஆகியன இணைந்து நடத்திய 3ஆவது இலவச மருத்துவமுகாம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற தொனிப்பொருளில், சேவையின் தேவை கருதிய இந்த முகாம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது. (க-...)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06 . 01 . 1936 | 06 . 04 . 2026 |

### திருமதி நாகலிங்கம் வன்னமணி

பாரதி வீதி, நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் வன்னமணி 06.04.2026 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மருதர் நாகலிங்கம் (ஓய்வுபெற்ற கூட்டுறவு கணக்கு பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சூரியர் மாணிக்கம் - இலட்சுமி தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான மருதர் - சிதேவி தம்பதியரின் மருமகளும், குலேந்திரன் (செல்வம் - ஜேர்மனி), மைத்திரேயி (ஜேர்மனி), சந்திரிக்கா (வவா), புவனேந்திரன் (இந்திரன் - பிரான்ஸ்), கௌரிமலர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், கௌரி (ஜேர்மனி), ஞானேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற அன்பழகன் (சின்னக்கிளி) மற்றும் நிலாவண்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரகவி, சௌமியா, டிவாகர், டிலானி, சானுஜா, டனுசாந், கிரிஷாந், மதுஷாந், பிரஷாந், வினுஷா, விவேக்கா, பிரஷாளினி, ஆரங்கன் ஆகியோரின் பேர்த்தியும், ரோனியின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாரதி வீதி, நயான்மார்கட்டு.**
**077 3534 570**

**தகவல்: T.சுதாகர்.**
**077 199 639**

(CS 31578) A

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 . 10 . 1933 | 06 . 04 . 2026 |

### வயிரவப்பிள்ளை இராமலிங்கம்

**(முன்னாள் தெ.ப.நோ.கூ.சங்க ஊழியர்)**

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் பங்களா வீதி, மல்லாகத்தை (வீரபத்திரர் கோயிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவப்பிள்ளை இராமலிங்கம் அவர்கள் நேற்று (06.04.2026) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரவப்பிள்ளை - குஞ்சரப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - பூதாத்தப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதவதி அவர்களின் அன்புக் கணவரும், சுகிர்தினி (சுவிஸ்), சுகுமார் (இலண்டன்), ஜெயக்குமார் (சுவிஸ்), நந்தினி (இலண்டன்), திருக்குமார் (தபால் திணைக்களம்-யாழ்ப்பாணம்), நளாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரஞ்சன் (சுவிஸ்), புஸ்பம் (இலண்டன்), பிரசாந்தி (சுவிஸ்), சுதந்திரகுமார் (இலண்டன்), சுயாதனா, அசோதரன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்- தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதர்சனா-சபேசன், நிவேதனா-சுவர்ணன் (சுவிஸ்), லவீனா, சகீனா (இலண்டன்), சுலக்ஷன் (சுவிஸ்), ரசிதா, றஜீதன் (இலண்டன்), கிருஷிகா (மாணவி-யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ரூபிகன் (மாணவன் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சுகேஸ் (மாணவன் -யா/ இந்துக் கல்லூரி), பிரஜீனா (மாணவி-யா/இந்து மகளிர் கல்லூரி), ருஜனிகா (மாணவி- யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஸ்ட வித்தியாலயம், மல்லாகம்) ஆகியோரின் அன்புப் பேரனும், ஆதீஸ், வினிஷா (சுவிஸ்), ஆதியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்க ளான அன்னபாக்கியம், பூரணபாக்கியம் (அம்பிகா), சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், மற்றும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், திருநாவுக்கரசு, ஜெகசோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2026) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**வீரபத்திரர் கோயிலடி,**
**பங்களா வீதி, மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 31579)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## புதன்...

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி இது தொடர்பில் நேற்றுத் தெரிவித்ததாவது:-
எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாட்டில் புதன்கிழமைகளில் விசேட விடுமுறை வழங்கப்பட்டு வந்தது. எரிபொருள்களின் இருப்பு தற்போது உறுதி செய்யப்பட்டுள்ள காரணத்தால், எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை முதல் இந்த விசேட விடுமுறை ரத்துச் செய்யப்படுகின்றது.
அரசாங்கத் திணைக்களங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் நீதித்துறைச் சேவைகள் என அனைத்தும் இனிவரும் புதன்கிழமைகளில் வழமைபோல் இயங்கும். இது தொடர்பான முறையான சுற்றறிக்கை விரைவில் வெளியிடப்படும் - என்றார். (அ-ம)

## தடுத்து...

வாதத் தடைச்சட்டத்தில் கைது செய்யப்பட்ட அவரை, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தொடர்ச்சியாகத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றது.
இதையடுத்தே, தான் தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராக சுரேஷ் சாலே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.
குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் தான் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றமை சட்டவிரோதமானது என்று தனது மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.
பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினர் பெயரிடப்பட்டுள்ளனர். (அ-ம)

## குடியரசுத்...

பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்து அவர் இருதரப்புப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இந்தப் பயணம் தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி மற்றும் இந்தியத் துணைத்தூதுவர் சத்யஞ்சல் பாண்டே ஆகியோர் தலைமையில் இடம்பெற்று வருகின்றன. (அ-ம)

## இரண்டு...

இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நல்லூர் மந்திரிமனை அழியும் அபாயத்தில் உள்ளது. அதன் ஒரு பகுதி கடந்த மழைக்கு இடிந்து விழுந்துள்ளது. அதன் அருகில் வசிப்பவன் என்ற வகையில் எனக்கு அது தொடர்பாக அக்கறை உள்ளது. யாழ்ப்பாணத்தின் தொன்மையான வரலாற்றுச் சின்னமான மந்திரிமனை கண் முன்னே அழிந்து செல்வதை இனியும் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. இன்னும் ஒரு மழை வந்தால், இந்தக் கட்டடம் முழுமையாக இடிந்து விழக்கூடிய நிலையே காணப்படுகின்றது.
மந்திரிமனை நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் சொத்தாக உள்ளது. எனவே, இது தொடர்பாக அவர்கள் விரைவாக ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதனைச் சீரமைப்புச் செய்வதற்கான நிதியை ஏற்பாடு செய்வதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். நல்லூர் மந்திரிமனையை புனரமைப்புச் செய்வதற்கு எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளுக்குத் தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டு வருகின்றது. இனியும் இந்த விடயம் இவ்வாறு இழுபறியில் நிற்கக்கூடாது. எனவே, இரு தரப்பினரும் விரைவில் ஒரு முடிவுக்கு வந்து அது தொடர்பில் எமக்கு அறிவிக்க வேண்டும் - என்றார். (அ-ம-26)

## மாவா...

னர். வவுனியா - குடியிருப்புப் பூந்தோட்டம் வீதியில் உள்ள கடையொன்றில் மாவா விற்பனை இடம்பெறுவதாகப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் அடிப்படையிலேயே மாவா விற்பனை மற்றும் கொள்வனவில் ஈடுபட்ட 6 பேர் கைது செய்யப்பட்டனர்.
அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-110)

## இளைஞரொருவர்...

மீட்கப்பட்டுள்ளன. பாசையூர் பகுதியில் இளைஞர் ஒருவர் வாளுடன் நடமாடுகின்றார் என்று பொலிஸாருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அந்த இளைஞரைக் கைது செய்தனர். மேலதிக விசாரணைகளின் போது அந்த நபரின் உடமையில் இருந்து போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன. அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-26-23)

## பணம்,...

டுள்ளனர். அவர்களிடம் இருந்து, யாழ்ப்பாணம் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் உள்ள கடையில் திருடப்பட்ட 3 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள், கலட்டி அம்மன் கோவிலுக்கு அருகாக உள்ள வீடுகளில் திருடப்பட்ட மூன்றரைப் பவுண் தங்க மோதிரங்கள் மற்றும் 25 ஆயிரம் ரூபா பணம் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைக்குப் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நட

வடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## வடமாகாணத்துக்கு...

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் இடிமின்னலுடன் கூடிய கனமழையின் தாக்கம் எதிர்வரும் ஓரிரு தினங்களுக்குத் தொடரும். வடக்கு, மேல் சப்ரகமுவ, மத்திய, வடமேல், வடமத்திய மாகாணங்களும், காலி, மாத்தறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களும் இடிமின்னல் தாக்கத்தால் அதிகம் பாதிக்கப்படச் சாத்தியங்கள் உள்ளன.
இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்வதற்காக, பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் - என்றுள்ளது. (அ-ம)

## அமெரிக்காவைக்...

டம் இடம்பெறவுள்ளது. புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாகவே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## எரிவாயுக்...

செய்துள்ளது. இவ்வாறான நிலையிலேயே, 7 ஆயிரம் தொன் எரிவாயுவை ஏற்றியவாறு கப்பலொன்று நேற்று நாட்டை வந்தடைந்தது.
பண்டிகைக் காலத்தில் எரிவாயு விநியோகத்தைத் தடையின்றி மேற்கொள்ளும் நடவடிக்கையாக இது அமைந்துள்ளது என்று லாப்ஸ் எரிவாயு நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (அ-ம)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
25 . 02 . 1950



இறைவன் அடியில்
05 . 04 . 2026

### செல்லத்துரை யோசப்

**(அகில இலங்கை சமாதான நீதவான் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்)**

நாரந்தனை, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட திரு செல்லத்துரை யோசப் அவர்கள் 05.04.2026 ஞாயிற்றுக் கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - மேரி ஜோசப்பின் (அன்னம்) அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற நல்லையா - நாகேஸ்வரி அவர்களின் அன்பு மருமகனும், இரத்தினம் அவர்களின் பாசமிகு கணவரும், Dr. கமிலஸ் (District Medical Officer, Divisional Hospital, Valvedddithurai), டயானா (District Secretariat, Jaffna), டனிஸ்ரன் (Civil Engineer - USA) அவர்களின் பாசமிகு தந்தையும், வைதேகி (Nursing Officer - Teaching Hospital, Jaffna), நிலோச்குமார் (Lecturer - Professional Development Centre for Teachers - Mannar) மற்றும் கிறிஸ்ரா (Accountant-USA) அவர்களின் அன்பு மாமனாரும், லூர்த்தம்மா (ஜெயம்- ஓய்வு பெற்ற ஆசிரியை), ஹெலன், காலம்சென்ற ஜெயரட்ணம், அன்ரன், வின்சன் (Australia), ஸ்ரீபன் (Australia), பேக்மன் (Australia), றஞ்சினி, ஆகியோரின் அன்பு சகோதரனும், ஜாசன், ஆருக்ஷனா, அனுர்த்திகா, ஷனன்டா, ஷான்விகா ஆகியோரின் பேரனுமாவார்.
அன்னாரின் பூதவுடல் இல 69, கன்னியர் மடம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 08.04.2026 அன்று (புதன் கிழமை) மன்னாரில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் மன்னார் புனித மரியன்னை தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மன்னார் பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

ICS 315801 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சில்வர்ஸ்ரார்ஸ் கழக

# கால்பந்தாட்ட அரையிறுதிகள்

சில்வர்ஸ்ரார்ஸ் விளையாட் டுக் கழகத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்றுவரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நாளையும், எதிர்வரும் 10ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. நாளை நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து வேலணை ஐயனார் அணி மோதவுள்ளது. எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் அணி மோதவுள்ளது. (ம)

# கைவிடப்பட்டது ஆட்டம்




ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற, கொல்கத்தா பஞ்சாப் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையிலேயே மழை குறுக்கிட்டு ஆட்டம் கைவிடப்பட்டது. (ம)

# ஈரானின் தாக்குதலை முறியடித்த இஸ்ரேல்

லண்டன், ஏப்.7

தெற்கு இஸ்ரேலை இலக்கு வைத்து ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களை இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் வெற்றிகரமாக இடைமறித்து அழித்துள்ளனர் என்று இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுக் காலை தெற்கு இஸ்ரேலின் பீர்ஷெபா உள்ளிட்ட பல பகுதிகளில் அபாய எச்சரிக்கை ஒலிகள் எழுப்பப்பட்டன. அதனால் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வான்பரப்பில் ஊடுருவிய ஈரானிய ஏவுகணைகளை இஸ்ரேலிய வான் பாதுகாப்பு அமைப்பு வெற்றிகரமாக இடைமறித்து அழித்தது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தாக்குதலில் எவ்வித உயிர்ச்சேதங்களோ அல்லது காயங்களோ ஏற்படவில்லை என அல்ஜெஸீரா செய்தி வெளியிட்டுள்ளது. (எ-இ)


## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- இயந்திர இயக்குநர் (Machine Maintainer)
- உதவியாளர் (Helper)
- பழகவிரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்

ஆர்வமுள்ளவர்கள்
நேரில் சமுகமளிக்கவும்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## 25ஆவது ஆண்டில் நாம்

ஓர் அச்சுக்கூடம்
மதி கலர்ஸ்
உங்கள் எண்ணங்களின் வண்ணங்களாய்...

25 Years
2001 - 2026
ANNIVERSARY

திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை

25ஆம் ஆண்டில் தடம் பதிக்கும்
எமது நிறுவனத்திற்கு
இதுவரை காலமும் பலமாகவும்,
துணையாகவும் ஒத்தாசையாகவும்
இருந்தது நீங்களே!
நாம் சரிந்த போதெல்லாம்
எம்மோடு தோளோடு தோள்
நின்றவர் நீங்கள்.
நாம் உயர்ந்தபோது அந்த மகிழ்வைப்
பகிர்ந்தவர்களும் நீங்களே!
உங்கள் அனைவருக்கும்
இந் நன்னாளில் எமது
மனமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.
ஒன்றாகக் கொண்டாடுவோம்...

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
mathicolours@gmail.com
0212229285

CUSTOMER CARE
0777222259




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 07.04.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org